# HISTORY OF EUROPE FROM 1453 TO 1789 C.E

## Sub Code:18K3HO6

## UNIT-1

**புவியியல் கண்டுபிடிப்புக்கள்:**

**காரணங்கள் :-**

**1.மார்க்கோ போலோவின் பயணக்குறிப்புகள்:-**

வெனிஸ் நகரப் பயணி மார்க்கோ போலோ 13-ஆம் நூற்றாண்டில் சீனா,ஜப்பான்,கிழக்கெத்திய தீவுகள்,பாரசீகம்,இந்தியா போன்ற நாடுகளுக்கு பயணம் செய்து அவைகளை குறிப்புகளாகக் கொடுத்தார்.இவைகளை படித்த மக்கள் புதிய பகுதிகளைக் காண்பதில் ஆர்வம் காட்டினர்.

**2.1453** -இல் துருக்கியர் கான்ஸ்டாண்டிநோபிளை கைப்பற்றியவுடன் இப்பகுதி வழியாக செல்லும் வர்த்தக பொருட்களுக்கு அதிக வரி விதித்தனர்.இதனால் புதிய கடல்வழி கண்டுபிடிக்கவேண்டும். என்ற உணர்வு எற்பட்டது.

3.**மறுமலர்ச்சி:-**

உலகத்தையும் வாழ்க்கையையும் புதிய நோக்குடன் அறியும் உணர்வும் ஆடம்பற பொருள்களை பயன்படுத்தும் ஆர்வமும் புதிய கடல்வழி கண்டுபிடிக்க காரணமாயிற்று.

**4.சிலுவை போர்கள்:-**

இடைகாலத்தில் நடந்த சிலுவை போர்கள் விளைவாக ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் வியாபாரத் தொடர்பு எற்பட்டது.ஆசியப் போர்க்களங்கலிருந்து திரும்பிய ஐரோப்பியர் பட்டு,தந்தம்,முத்து,வாசனை பொருட்கள் போன்ற விலை உயர்ந்த பொருட்களை எடுத்து வந்தனர்.இப்பொருட்கள் வெனிஸ்,ஜெனொவா,மிலான்,பினாரன்ங் போன்ற இதாலிய நகரங்களில் அதிக விலைக்கு விற்கப்பட்டது.இதனால் புதிய கண்டுபிடிப்புகளுக்கு ஆர்வம் காட்டினர்.

5.**உலகம் உருண்டை வடிவமானது என்ற கருத்து:-**

இக்கருத்து மக்களின் ஆவலைத் தூண்டியது எங்கிருந்து கிளம்பினாலும் திரும்ப அதே இடதிற்கு வரமுடியும் என்ற நம்பிக்கை பிறந்தது.இது புதிய கடல் வழி கண்டுபிடிப்பிற்கு காரணம் ஆயிற்று.

**6.திசைகாட்டும் கருவி:-**

விஞ்ஞான சாதனைகள் கடற்பயணத்தில் எற்படும் இடையூர்களை குறைத்தது.திசைகாட்டும் கருவி மூலம் நீண்டதூரம் செய்யவும் அரியாத கடல் மீது செல்லவும் உதவியாக இருந்தது.

**7. ஹென்றியின் ஆதரவு:-**

போர்ச்சுத்தல் இளவரசர் ஹென்றி புதிய கடல்வழிகளையும் நாடுகளையும் கண்டுபிடிப்பதில் புதிய வேகத்தையும் உற்சாகர்தையும் ஊட்டினார்.இதற்கான மாலுமி பயிற்சிப்பள்ளி ஒன்றை ஆரம்பித்தார்.இதனால் மாலுமி இளவரசர் என்று அழைக்கபட்டார்.

**8.சமயபரப்பாளர்கள்:-**

மக்களை கிருஸ்தவ மதத்திற்கு மதமாற்றம் செய்வதில் சமயபரப்பாளர் கொண்டு இருந்த தணியாத தாகம் புதிய கண்டுபிடிப்பிற்கு காரணம்.

**9.மக்கள் தொகை பெருக்கம்:-**

ஐரோப்பாவின் பல பாதங்களிலும் மக்கள் தொகை பெருகிவிட்டதாலும் கொடும் வறுமையிலிருந்து தங்களை விடுபித்துக் கொள்ளவும் புதிய இடங்கள் தேவைப்பட்டது.

**10.புகழாசை:-**

புதிய நிலையில் கண்டுபிடிப்பு தத்தம் நாட்டிற்கு பேரும் புகழும் தர வேண்டும் என்ற தாய் நாட்டு உணர்ச்சி எல்லா நாடுகளுக்கும் இருந்தது.

புதிய கடல்வழி கண்டுபிடிப்புகளை மேற்கொண்ட நாடுகள் எவை?

போர்ச்சுகல்,ஸ்பெயின்,இங்கிலாந்து.

**போர்ச்சுக்கல்:-**

புதிய நிலப்பரப்புகளை கண்டறிவதில் போர்ச்சுகல் முதன்மையாக திகழ்ந்தது.அதற்கென இன்னாடு மேற்கொண்ட செயல்பாடுகள்.

**ஹென்றியின் செயல்பாடுகள்:-**

1.போர்ச்சுக்கீசியர்களுக்கு பொருள் உதவியும் ஊக்கமும்,உற்சாகமும் அளித்தார்.இதனால் மெடோரியா,அசோர்,கானரி போன்ற தீவுகள் கண்டுபிடிக்கபட்டன.

2.1445-இல் செனீகல்,காம்பியா ஆகிய முகத் துவாரங்கள்,வெர்டி முனை கண்டுபிடிக்கபட்டது.1460 ஹென்றி மறைந்தார்.

**2.பார்த்திலோமியடயஸ் செயல்பாடுகள்:-**

1489-இல் போர்ச்சுக்கீசியரான ஆப்பிரிக்க தென்கோடி முனையை அடைந்தார்-கப்பல் மூலம்.ஆனால் கடும்புயல் வீச,அப்பகுதிக்கு புயல் முனை எனப் பெயரிட்டு நாடு திரும்பினார்.இப்பகுதி பின்னர் இந்தியாவை கண்டறிய புதிய நம்பிக்கையை கொடுத்ததால் அதற்கு தன்னம்பிக்கை முனை என்று போர்ச்சுக்கீசிய மன்னர் ஜான் பெயரிட்டார்.

**3.வாஸ்கோடகாமா:-**

1497-இல் போர்ச்சுக்கீசியரான் இவர் 4 கப்பல்களுடன் புறப்பட்டு தன்நம்பிக்கை முனையை கடந்து கள்ளிக்கோட்டையை அடைந்தார்.இவர் இந்தியாவிற்கு போர்ச்சுகல்லிருந்து கடல்வழியை கண்டுபிடித்தார்.

இதுவே பின்னர் இவர்கள் பல குடியேற்றங்களை எற்படுத்தவும்,ப வாணிபதளங்களை இந்தியாவில் உருவாக்கவும் வழி எற்படுத்தி கொடுத்தது.

**ஸ்பெயின்:-**

ஸ்பெயினும் போர்ச்சுகலைப் போன்றே புதிய பகுதிகள் கடல் வழியாகக் கண்டுபிடிப்பதில் ஆர்வம் காட்டியது.

**கொலம்பஸ்:**

இத்தாலியரான இவர் அட்லாண்டிக் பெருங்கடலில் மேற்கு நோக்கிப் பயணம் செய்து கீழை நாடுகளை கடல் வழியாகக் காண விரும்பினார்.

1492 - இல் 3 கப்பல்களுடன் புறப்பட்ட இவா் புதிய நிலப்பரப்பை வந்தடைந்தாா். இப்பகுதியினை கிழக்கிந்திய் நிலத்தீவுகளின் ஒரு பகுதியெனவும், இங்கு வாழும் மக்கள் இந்தியா்கள் என்றும் அழைத்தாா். இப்பகுதி மேற்கிந்திய தீவுகள் என்றே அழைக்கப்படுகின்றன. உண்மையில் அப்பகுதி பலாமாத்தீவுகள் ஆகும். அனைத்தும் ஸ்பெயினிடம் ஒப்படைக்கப்பட்டன.

மேலும் மூன்று பயணங்களை மேற்கொண்டு தா்பயன்கடல், கரிபியன் கடல் வெனிசுலா மத்திய அமெரிக்கா ஆகியவற்றைக் கண்டறிந்தாா். 4 வது பயணத்தில் ஓரினாகோ நதி முகத்துவாரத்தை கண்டறிந்தாா். வளமான பகுதிகள் கிடைக்கும் என எதிா்பாா்த்த ஸ்பெயின் அவ்வாறு இல்லாததால் ஏமாற்றமடைந்து கொலம்பஸ் திரும்பி வரும் படி அழைத்து அவரும் திரும்பி வந்து, தான் கண்டுபிடித்த புதிய பகுதி, புதிய கண்டம் என அறியாமலேயே வறுமையில் ஊழின்றி இறந்தாா் - 1506 ல்

2. அமெரிக்கா வெஸ்புகி

இத்தாலியரான இவா் ஸ்பெயின் மன்னா் உதவியுடன் 1501 -இல் தென் அமெரிக்கப் பயணம் மேற்கொண்டாா். 2000 மயில்கள் நீளமுடைய பிரேசிலில் கடற்கரையை ஆராய்ந்து பல நூல்கள் எழுதினாா். கொலம்பஸ் கண்டுபிடித்தது இந்தியா அல்ல அது ஒரு ‘‘புதிய உலகம்’’ என்று அறிவித்தாா். அதனாலேயே அப்பகுதி அவா் பெயரால் அமெரிக்கா என அழைக்கப்படுகிறது.

போப்பாண்டவா் 6 – ஆம் அலெக்ஸாண்டா் 1493 - இல் , கீழை நாடுகளுடன் போா்ச்சுக்கலும் மேலை நாடுகளுடன் ஸ்பெயினும் மட்டுமே வா்த்தக தொடா்பு மேற்கொள்ள ஆணை பிறப்பித்தாா். 1494 - இல் இந்த ஆணை மேற்கு திசையில் மாற்றப்பட்டது.

நன்னம்பிக்கை முனை வழியாக ஸ்பெயின் கீழை நாடுகளுடன் வா்த்தக தொடா்பு கொள்ளக் கூடாதென தடை விதிக்கப்பட்டதால் ஒரு புதிய பாதை கண்டுபிடிக்க முற்பட்டது.

மெக்கல்லன்

போா்ச்சுக்கீசியரான இவா் ஸ்பெயின் முதலாம் சாா்லஸின் அனுமதியுடன் 5 கப்பல்களுடன் தென் அமெரிக்காவின் தெற்கு முனையை வந்தடைந்தாா். இங்குள்ள **ஜலசந்தி**மெகல்லன் ஜலனுந்த் என இவரின் நினைவாக அழைக்கப்படுகிறது. அங்கிருந்து தெற்கு நோக்கி பயணம் செய்த போது அங்குள்ள கடல் அலை காற்று அமைதியாக இருந்ததால் பசிபிக் பெருங்கடல் என அதனை அழைத்தாா்.

பின்னா் கீழ்த்திசையில் ஒரு தீவுக் கூட்டத்தை அடைந்தாா். அதற்கு 5 – ஆம் சாா்லஸின் மகன் பிலிப் பெயரை அத்தீவுகளுக்கு சூட்டினாா். அது பிலிப்பைன்ஸ் . இங்கு வாழ்ந்த மக்களால் இவா் கொல்லப்பட்டாா். இவருடன் சென்ற கப்பல்களில் ஒன்று ஆப்பிரிக்காவை வலம் வந்து ஸ்பெயினை வந்தடைந்தது. இப்பயணம் தான் கடல்வழியாக உலகை வலம் வந்த முதற்பயணமாகும். 3 ஆண்டுகள் ஆனது. இதனால் உலகைச் சுற்றிய முதல் மாலுமி எனப்படுகிறாா்.

3.இங்கிலாந்து பிரான்சு

ஜான்காபட் - இங்கிலாந்தில் வாழ்ந்த இத்தாலியரான இவா் 7 – ஆம் ஹென்றியின் உதவியுடன் 1497 - இல் வட மேற்காக பயணம் செய்து பணிமூடிய பகுதியை கண்டுபிடித்து நியூ பவுண்ட்லாந்து என பெயரிட்டாா்.

ஜாக்கல் காா்டியா்

இவா் 1534 - இல் 3 முறை வட அமெரிக்கப் பயணம் மேற்கொண்டாா். செயிண்ட் லாரன்ஸ் நதியில் கப்பல் செலுத்தினாா். அங்கு செவ்விந்தியா்களைக் கண்டாா். அந்நாடு கனடா.

## தாலமி

கிரேக்க நாட்டவரான இவர் கடற்பகுதியில் ஒரு தீவு இருப்பதை குறித்துள்ளார். இதற்கு யாரும் அறியாத தென்பூமி எனப் பெயரிட்டார்.

டாரெஸ்

1606 - இல் ஆஸ்திரேலியாவையும் பேப்புவாவையும் பிரிக்கும் ஜலசந்தியை கடந்தார். அவரைப் பின்பற்றிச் சென்ற மாலுமிகள் ஆஸ்திரேலியாவின் வடபகுதியைக் கண்டனர். அதற்கு நியூஹாலந்து எனப் பெயரிட்டனர்.

டாஸ்மென்

1642 இல் டாஸ்மேனியாவையும் நியூசிலாந்தையும் கண்டுபிடித்தார்.

வளைவுகள்

அரசியல் பொருளாதாரம், சமுதாய பண்பாடு போன்ற துறைகளில் பல்வேறு விதமான வளைவுகள் ஏற்படுத்தியது.

அரசியல் விளைவுகள்

1. உலகின் ஏனைய நாடுகளுடன் ஐரோப்பா தொடர்பின்றி இருந்த நிலை முடிவுக்கு வந்தது.

2. காலனி ஆதிக்கச் சக்திகள் ஏற்பட்டன. இவர்களுக்கு இடையே புதிய நிலப்பரப்புகளை கைப்பற்ற வேண்டுமென்ற போட்டியும் பொறாமையும் ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட சச்சரவுகள் உலப் போர்களுக்குக் காரணமாயின.

3. நடுத்தர வகுப்பினர் மன்னருக்கும், உயர்குடிமக்கள் - சமயக் குருமார்களுக்கும் நடந்த போராட்டத்தில் இருப்பிரிவினருக்குமிடையே சச்சரவுகள் ஏற்பட்டது.

பொருளாளதார வளைவுகள்

1. வாணிபம் புதிய மெருகுடன் நடைபெற்றது. மத்திய தரைக்கடல் வழியே நடைபெற்ற வாணிபம் பெருங்கடல்கள் வழியே நடைபெற்றது.
2. பெருங்கடற்பயணங்களுக்கு வர்த்தகர்களுக்கு கப்பல்கள் தேவைப்பட்டதால் கப்பல் கட்டும் தொழில் வளர்ந்தது.

3. மரம், தானியம், கால்நடைகள் போன்ற வலிமையானவை கப்பல்களில் ஏற்றிச் செல்லப்பட்டு வாணிபத்துறையில் மாற்றங்கள் ஏற்பட்டன.
4. பொருட்களை உற்பத்தி செய்வதில் முறை கைவிடப்பட்டு முதலாளித்துவ முறை தோன்றியது.
5. பெருமளவில் வா்த்தகம் நடைபெற்றதால் மிகுதியான கையிருப்பு தேவைப்பட்டது. எனவே தனிநபா்களின் முயற்சிகளுக்கும் தொழில் நிறுவனங்களுக்கும் பதிலாக கூட்டுப்பங்கு கம்பெனிகளும் பங்குத் தொழில் நிறுவனங்களும் வா்த்தகத்தை ஏற்று நடத்த ஏதுவாயிற்று.
6. வாணிகக் கொடுக்கல் வாங்கல் நிலை அதிகமாக இருந்ததால் அமெரிக்காவிலிருந்து விலை மதிப்பற்ற உலோகங்கள் இடைவிடாது ஐரோப்பாவிற்கு வந்து கொண்டிருந்தன. புதுப் பணப் பிரச்சனைகளைத் தோற்றுவித்தது பணத்தின் மதிப்பு குறைந்தது. ஏராளமான தங்கம் வந்தமையால் பொருளாதாரத் துறையில் மொ்கண்டலிஸம் என்ற ஒரு புதிய கருத்து தலை தூக்கிற்று.
7. வா்த்தகா்கள் திரட்டிய பெருஞ்செல்வம் புதிய முதலாளிகள் வரை வழி ஏற்படுத்தியது.

சமுதாய விளைவுகள்

1. காலனிகள் தோன்றுவதற்கு இக்கண்டு பிடிப்புகள் துணை செய்தன. இக்கண்டுபிடிப்புக்களின் புதிய உலகில் ஐரோப்பியா்களின் குடியேற்றம் அதிக அளவில் இருந்தது.
2. அங்கு வறுமை, மக்கள் தொகைப் பெருக்கம் ஆகிய அதிமுக்கியமான பிரச்சனைகளை குடியேற்றம் தற்காலிகமாக தீா்த்து வைத்தது.
3. அடிமை முறை அதிகமாக வளா்ச்சி பெற்றது. குறிப்பாக ஆப்ரிக்க நீக்ரோக்களைத் தருவித்து பண்ணைகளில் வேலைவாங்க அமெரிக்காவிலுள்ள ஐரோப்பியப் பண்ணைக்காரா்கள் தலைப்பட்டனா்.
4. சமுதாயத்தில் நடுத்தர வகுப்பினா் என்ற புதிய பிரிவினா் உருவாயினா். இவா்கள் அரசியலில் பங்கு பெற்றத் தீவிரம் கொண்டனா்.
5. தொழிற் புரட்சி ஏற்பட்டது.

பண்பாட்டு விளைவுகள்

1. இக் கண்டுபிடிப்புக்கள் ஐரோப்பிய நாகரீகத்தின் வளா்ச்சிக்கு வகை செய்தன. இது அமெரிக்கா, ஆப்பிரிக்கா ஆசியா ஆகிய கண்டங்களில் விரைவாக பரவுவதற்கு வழி செய்தது.
2. கண்டுபிடிக்கப்பட்ட புதிய நிலப்பகுதிகளில் வாழ்ந்த புதிய மக்களுடன் ஏற்பட்ட தொடா்பு மறுமலா்ச்சி இயக்கம் பரவ வாய்ப்பை ஏற்படுத்தியது.

# Unit - 2

## மறுமலர்ச்சி

(மறு மலர்ச்சி என்றால் என்ன?)

பண்டைய கிரேக்க, ரோமானியர்களின் கலை, இலக்கியம், அறிவியல் ஆகியவற்றைக் கற்று உணர வண்டுமென்று மக்களின் மனதில் ஐரோப்பாவில் மத்திய காலத்தின் இறுதியில் தோன்றிய ஆர்வமே மறுமலர்ச்சி எனப்படும். மறுமலர்ச்சி என்பதன் பொருள் மறுபிறப்பு.

(மறு மலர்ச்சிக்கான காரணங்களை விவரி!)

1.தேசிய திருச்சபைகளின் வளர்ச்சி

புனித ரோமானியப் பேரரசில், ரோம் நகர போப் கிறித்தவ உலகின் தலைவர். அவரின் கூற்று ஆராயப்படாமல் கூட்டத்தைப் போன்றே மதிக்கப்பட்டது. தனிநாடுகள் தோன்றிய பிறகு தேசிய உணர்வுகள் எழுந்தன. புதிய திருச்சபைகள் தோன்றிய பிறகு போப்பின் ஆணைகள் ஆராயப்பட்டன. இதுவும் மறுமலர்ச்சிக்குக் காரணமாயிற்று.

2. நிலமானிய முறையின் சரிவு

நிலமானிய முறைதான் திருச்சபையின் வளர்ச்சிக்கு அடித்தளமாக இருந்தது. பிரபுக்களுக்கு பயந்து திருச்சபையைப் பற்றியோ, போப்பை பற்றியோ யாரும் குறை கூறவில்லை. ஆனால் சிலுவைப்பேரினால் நிலமானிய முறைசரிய, திருச்சபையும் சரிந்தது. இது மறு மலர்ச்சிக்குக் காரணமாயிற்று.

3. சிலுவைப் போர்கள்

அராபியர் வசம் வீழ்ந்த எருசெலம் நகரைக் கைப்பற்றவும், இஸ்லாமியரை ஒடுக்கவும், 8 சிலுவைப் போர்கள் நடந்தன. இதில் கிறிஸ்துவர்கள் தோற்றனர். இதனால் பிரபுக்கள் தங்கள் செல்வத்தை இழந்தனர். சொந்தமான நிலங்களை விற்றனர். பிளாட்டோ, அரிஸ்டாட்டில் போன்றோரின் தத்துவங்களை படித்தனர். தங்களின் மத நூல்களின் கருத்துக்களே முடிவல்ல என்பதை அறிந்ததும் மறுமலர்ச்சிக்கு காரணமாயிற்று.

4. கான்ஸ்டாரை நோபிளின் வீழ்ச்சி

துருக்கியர் கான்ஸ்டாண்டி நோபிளை கைப்பற்றியவுடன் அங்கிருந்த கிரேக்க அறிஞர்கள் தங்கள் இலக்கியச் செல்வங்களுடன் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று குடியேறினர்.

கிரேக்கா்களின் தத்துவம். அறிவியல் கோட்பாடுகள் அனைத்தும் ஐரோப்பியா்களிடையே மிகுந்த ஆா்வத்தினை ஏற்படுத்தியது. கல்வி கற்ற வகுப்பினா் அறிஞா்களை ஊக்கப்படுத்தினா்.

5. அச்சுப் பொறி இயந்திரம்

இதன் மூலம் அறிவியல் வளா்ச்சி ஏற்பட்டது. சமய இலக்கியங்கள் மறைந்தன. புதிய கோணத்தில் இலக்கியங்கள் தோன்றின. பல பழைய புதிய நூல்கள் அச்சிடப்பட்டு இலக்கியப் புரட்சி ஏற்பட்டது.

6. கீழையருடன் தொடா்பு

சிலுவைப் போரின் பொழுது ஐரோப்பியப் படைவீரா்களுக்குக் கிழக்கத்தியருடன் ஏற்பட்ட தொடா்பு மூடநம்பிக்கையின்றி எதையும் ஆராய்ந்து அறியும் பண்பாட்டை ஏற்படுத்தியது.

7. புதிய கண்டுபிடிப்புகள்

மாரினா் திசைகாட்டும் கருவியை கண்டுபிடித்ததால் கடற்பயணம் மேற்கொள்ளப்பட்டது. விண்மீன்கள் ஆராய்ச்சியும் மேற்கொள்ளப்பட்டது. கொலம்பஸ் அமெரிக்காவையும், வாஸ்கோடகாமா இந்தியாவையும் பாா்த்திலோமிய டயஸ் தன்னம்பிக்கை முனையும் கண்டுபிடிக்க முடிந்தது. இதுவும் மறுமலா்ச்சிக்கு காரணம்.

8. செல்வந்தா்களின் உதவி

மறுமலா்ச்சி புது எழுச்சி பெற செல்வந்தா்கள் ஊக்கம் அளித்தனா். கலைஞா்களை ஊக்குவித்து பெரும் பொருள் செலவு செய்ததும் கலை வளா்ந்தது. கலையுலகில் மறுமலா்ச்சி ஏற்பட்டது.

மறுமலா்ச்சி இயக்கம் ஏற்பட்ட நாடுகள் இத்தாலி, இங்கிலாந்து, ஜொ்மனி, பிரான்சு.

இத்தாலி

இது ஐரோப்பிய மறுமலா்ச்சியின் பிறப்பிடம் இதனை ஐரோப்பிய கல்விக்கூடம் என்பா்.

இலக்கியத்தில் மறுமலா்ச்சி

கிரேக்க லத்தீன் மொழி புத்துயிா் பெற்றன. பல்கலைக்கழகங்களிலும் மடங்களிலும் லத்தீன் மொழி போதிக்கப்பட்டது. அரிஸ்டாட்டிலின் நூல்களம் கிரேக்க கவிஞா்களின் கவிதைகளும் எழுத்தாளா்களின் இலக்கியங்களும் மொழிபெயா்க்கப்பட்டன.

(i) டான்டே` ‘‘டிவைன் காமெடி’’ என்ற நூலை எழுதிய இத்தாலியக் கவிஞா். இத்தாலிய மொழியின் தந்தை எனப்படுகிறாா்.

(ii) பெட்ராா்க் இத்தாலிய எழுத்தாளா். மனித உலக வாழ்க்கை இயலின் தந்தை எனக் கருதப்படுகிறாா்.

(iii) பொகாசியோ் இத்தாலியின் உரைநடை ஆசிரியா் 100 சிறுகதைகளைக் கொண்ட ‘டெக்காமரன்’ என்ற நூலை எழுதினாா். உலகின் சிறந்த புத்தகங்களில் ஒன்றாக உள்ளது.

(iv) ரெபேல்' பிரான்சு எழுத்தாளா், காா்குண்டவா என்ற புத்தகத்தை எழுதினாா். இடைக்காலத்தில் நிலவிய அறியாமை, மூடப்பழக்கம், பாவச் செயல்கள் ஆகியவற்றை சுட்டிக்காட்டுகிறாா். மடோனா மாதாவும் குழந்தையும் என்ற ஓவியம் தலை சிறந்தது.

மாக்கிய வெல்லி

இத்தாலியின் பிரான்சு நகரைச் சாா்ந்தவா் இளவரசா் என்ற உயரிய நூலையும், பிரான்ஸின் வரலாறு என்ற நூலையும் எழுதினாா்.

தாமஸ்மூா்

உட்டோபியா என்ற நூலை எழுதினாா்.

ரோம்நகரம்

5 – ஆம் நிகோலஸ் வேடிகன் நூல் நிலையத்தை திறந்து வைத்தாா். உலகநாடுகளின் இலக்கியத் தலைநகரமாக ரோம் திகழ்கின்றது என்று 10 - ஆம் லியோ கூறினாா். ரோம் நகரின் கல்லூரிக்கு 100 பேராசிரியா்களை நியமித்து கிரேக்க மொழியும் இலக்கியங்களும் வளா்ச்சியடையச் செய்யப்பட்டது.

லொரன் சோ டி மெடிசி – என்பவா் செல்வாக்குமிக்கவா். அவா் எழுத்தாளா்களையும் கலைஞா்களையும் ஊக்குவித்தாா். பிளாடென் நூலகத்தை ஏற்படுத்தி கிரேக்க ரோம இலக்கியங்களை சேகரித்தாா். இதற்கென ஒவ்வொரு வருடமும் 60,000,- பவுண்டுகள் செலவழித்தாா். 200- க்கும் மேற்பட்ட கையெழுத்து பிரதிகள் இந்நூலகத்திற்கு வாங்கப்பட்டன.

கலைத்துறையில் மறுமலா்ச்சி

இயற்கை அழகையும், மனித உருவங்களையும் கலை வடிவில் வடித்தெடுக்க அக்கால கலைஞா்கள் முற்பட்டனா். பெரிய கட்டிடங்களும், ஆலயங்களும் ரோம கிரேக்க பாணியில் அமைக்கப்பட்டன. கலைவேலைப்பாடு மிக்க வண்ணங்கள் தீட்டினா்.

**மைக்கேல் ஏஞ்சலோ** - சிற்பங்களைப் படைத்துப் புகழ்பெற்றவா். பிளாரன்சிலுள்ள டேவிட் தலைவடிவம் மிகச் சிறந்த படைப்பு. போப்பாண்டவா் இரண்டாம் ஜீலியரிடம் பணியில் சோ்ந்தாா். வாடிகன் நகரிலுள்ள சிஸிடினே திருச்சபையின் கூரையில் ஓவியம் தீட்டினாா். இவரது கடைசித்

தீர்ப்பு என்ற ஓவியம் உலகப் புகழ்பெற்றது. இவர் பிற்காலத்தில் செயிண்ட் பீட்டரின் ஆலயத்தைப் புதுப்பிப்பதில் செலவிட்டார்.

லியானோடோ – டா – வின்சி

இவர் மறுமலர்ச்சியின் மந்திரவாதி என அழைக்கப்படுகிறார். இவர்களை இயக்கியத்துறையில் கட்டற்ற கற்பனைப் படைப்பாளர் இறுதி உணவு, மோனாலிசா ஓவியங்கள் நெந்சைத் தொடுபவை. பெரும்பாலான ஓவியங்கள் ஏசுவின் வாழ்க்கையைச் சித்தரிப்பதாக உள்ளன. சிற்பக்கலையிலும் சிறப்புப் பெற்றவர். இவர் பெரிய பொறியியல் வல்லுநர் கவிஞர். தத்துவமேதை, இசை வல்லுநர், விஞ்ஞானி.

பலஸ்டிரீனா - இவர் இத்தாலியைச் சேர்ந்தவர். சிறந்த இசைத் தொகுப்பாளர். இவர் தொகுத்த பாடல்கள் இக்காலத்திலும் இசைக்கப்பட்டு வருகின்றன.

காபரீலி – தற்கால ஆர்கெஸ்ட்ராவை தோற்றுவித்தவர். வெனிஸ் நகரம் இசைக்கு மிகவும் புகழ் பெற்றது.

டூரர் ஹோல்பீன் போன்ற ஜெர்மன் ஓவியர்களும் ரெம்பிபண்ட் போன்ற டச்சு ஓவியர்களும் மிகவும் புகழ்பெற்றது.

அறிவியல் - தற்கால அறிவியல் துறையின் தந்தையென அழைக்கப்படும் ரோபர் பேக்கன் எதனையும் ''கூர்ந்து தோக்கலும் தேர்ந்து தெரிதலும்'' வேண்டும் என்ற மேம்பட்ட கொள்கையை விளக்கி நடைமுறைக்குக் கொண்டு வந்தார்.

இவரது நூல்கள் எதனையும் ஆய்கின்ற பண்பையும் அறிவியல் உணர்வையும் வளர்த்தது.

கணிதம், வானவியல், இரசாயனம், பௌதீகம் மருத்துவம் ஆகிய துறைகளில் வியத்தகு படைப்புக்கள் தோன்றின.

| | | |
|---|---|---|
| தொலைநோக்கும் கருவி | – | கலீலியே |
| புவிஈர்ப்பு விசை | - | நியூட்டன் |
| கணித முறை வானவியலின் வளர்ச்சிக்கான அடிப்படை | - | கெப்லர் |

போன்றவை கண்டுபிடிக்கப்பட்டன.

இங்கிலாந்தில் மறுமலர்ச்சி

இத்தாலியில் கிரேக்க – லத்தீன் மொழிகள் வளர்ச்சி பெறுவதை இங்கிலாந்திலுள்ள ஆக்ஸ்போர்டு,கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக மாணவர்களை மிகவும் கவர்ந்தன.

வில்லியம் செல்லின் - 1465 இல் கிரேக்க எழுத்துப் பிரதிகளடன் இங்கிலாந்து வந்தார். சிறந்த மாணவர்களை உருவாக்கினார்.

தாமஸ் வினாகர் - பிளாரன்ஸ் நகரம் சென்று மருத்துவம் பயின்று 7 ஆம், 8 – ஆம் ஹென்றிக்களின் மருத்துவராகவும் இருந்தார்.

வில்லியம் குரோசின் - இவரது கிரேக்க சொற்பொழிவுகள் பலரை அறிஞர்களாக உருவாக்கியது. ஜான்கோலட் ஈராஸ்மஸ், தாமஸ்மூர் போன்றோர் இவரது பேச்சால் ஈர்க்கப்பட்டனர்.

ஜான் கூடன்பர்க்கு

இத்தாலியின் மேற்படிப்பு முடித்து லண்டனில் செயிண்ட் பால் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். இவர் செயிண்ட் பால் பள்ளி, வெஸ்ட்மினிஸ்டர் கிருத்துவ மருத்துவ பள்ளி போன்ற பள்ளிகளை நடத்தினார்.

ஈராஸ்மஸ் - ஆசிரியரான இவரது இத்தாலிய மறுமலர்ச்சி இயக்கம் பற்றிய கட்டுரைகள் மக்களை மறுமலர்ச்சி நோக்கிச் செல்லத் தூண்டியது. பிரெய்ல் ''ஆ'' பாலி என்ற நூலில் திருச்சபைகளின் ஒழுக்கக் கேடுகளை எடுத்துரைத்தார். அதனால் தான் இவர் இங்கிலாந்தில் லூதரின் இயக்கத்தின் முன்னோடி எனப்படுகிறார்.

தாமஸ் மூர் - உடோபியா என்னும் நூலில் கற்பனை உலகை குறிப்பிடுகிறார். சாமானியர்களை பற்றி கூறுகிறார்.

கோலட், ஈராஸ்மஸ், மூர் போன்றோர் ஆக்ஸ்போர்டு சீர்திருத்த வாதிகள் எனப்படுவர்.

இவர்களின் எழுத்துக்கள் மக்களின் அறிவு வளர்ச்சியை அதிகரித்தது. மக்கள் சமயத் துறையிலும் சீர்திருத்தத்தை ஏற்படுத்த முனைந்தனர். அதுவே சமய சீர்திருத்த இயக்கமாகும். ஆங்கில கட்டுரையாசிரியர் பிரான்சிஸ் பேக்கறும் தாடகக் கதையாசிரியர் ஷேக்ஸ்பியரம் ஆவர். இங்கிலாந்தில் மறுமலர்ச்சி இயக்கம் வேரூன்றியது. ரிச்சர்டு, குரோக், ஜெகி, தாமஸ், ஸ்மித் கேஸ் போன்ற அறிஞர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

இத்தாலிக்கு அறிஞர்களை அனுப்பி கிரேக்க லத்தீன் மொழிகளை பயின்றுவர 7 – ஆம் ஹென்றி ஏற்பாடு செய்தார். இவரது காலத்தை இங்கிலாந்தின் பொற்காலம் என்று கூறுவர்.

ஜெர்மனியில் மறுமலர்ச்சி - ஜான் கூடர்பர்க் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட அச்சுப்பொறி ஜெர்மானிய மறுமலர்ச்சி வளர்ச்சியைத் துரிதப்படுத்தியது புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் மறுமலர்ச்சி நாகரீக வளர்வதற்கான நிலைகளாயின. இவர்கள்

திருச்சபையினா் நடத்திய உலகியல் வாதிக்கையையும் ஏனைய குறைபாடுகளையும் வன்மையாகக் கண்டித்தனா். இவா்களது எதிா்ப்பு ஜொ்மானியில் சமயச் சீா்திருத்தம் தோன்றுவதற்கு வழி வகுத்தது.

பிரான்சு

கிரேக்க ரோமானிய மொழி இலக்கியங்களைக் கற்பதில் ஆா்வம் காட்டினா். இம்மனிதத் தன்மையியல் வளா்ச்சிக்குப் பெரிதும் உதவி பிரெஞ்சு அறிஞா்களை பூடு, பிராங்காய், இரபேலே, மன்னா் முதலாம் பிரான்சிஸ் என்போா் ஆவா்.

மறுமலா்ச்சியினால் ஏற்பட்ட விளைவுகள்

1.கிறிஸ்தவ மதத்திற்கும் இலக்கிய நாகரீகத்திற்கும் இடையே தொடா்பு உண்டானது.

2. பண்டைய இலக்கியங்களைப் படிக்கத் துவங்கியதால் மக்களிடையே ஆய்வுக் கண்ணோட்டம் வளா்ந்தது. படித்ததை அப்படியே ஏற்காமல் விவாதித்து, வினா எழுப்பி உண்மையைக் கண்டறிந்தனா். இதற்கென அறிவியல், கலை, அரசியல், சமயம், இலக்கியம் ஆகிய துறைகளில் வியத்தகு மாறுதல் ஏற்படுத்தியது.

3. கிரேக்கம், லத்தீன், மொழிகளைக் கற்கின்ற ஆவல் ஏற்பட்டது.

4. வட்டார மொழி வளா்ச்சியடைந்தது.

5. மறுமலா்ச்சி ஆா்வம் மக்களிடையே படைக்கும் ஆற்றலை வளா்த்தது இதனால் புதிய கண்டுபிடிப்புக்கள் தோன்றின.

6. அழிந்து போன பழங்காலச் சின்னங்களை பாதுகாப்பதில் ஆா்வம் கொண்டனா். அதன் விளைவாகத் தேசிய உணா்வுகள் பெருகின.

7. திருச்சபைக்கு எதிரான கருத்துக்களை பண்டைய இலக்கியங்கள் வளா்த்தமையால் திருச்சபையின் செல்வாக்கு மறைந்தது.

8. நிலமானிய முறை வீழ்ச்சியடைந்து, மன்னா்கள் வலிமையடைந்தனா்.

9. புதிய நாடுகளும், கடல்வழிகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

10. ஆங்கிலம், பிரெஞ்சு, ஜொ்மனி , ஸ்பானிஷ் போன்ற தேசிய மொழிகள் தோன்றின. புதிய கருத்துக்களை லத்தீன் மொழியில் எழுதாமல் மக்கள் தங்களின் 2 தேசிய மொழியில் எழுத ஆரம்பித்தனா்.

11. அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதால் விவசாய நூல்கள் அச்சிடப்பட்டு மக்களால் விரும்பிப் படிக்கப்பட்டது. அதனால் திருச்சபையின் அதிகாரத்தின் மீது மக்கள் சந்தேகம் கொண்டனர்.

12. மறு மலர்ச்சி இயக்கம் தொல்பொருள் ஆராய்ச்சிக்கு வகை செய்தது. புதைந்து போன கோவில்களையும் நகரங்களையும் ஆராய முயன்றனர்.

***சமயச் சீர்திருத்த இயக்கம்:-***

ஐரோப்பாவில் சமயத்துறையில் 16-ஆம் நூற்றாண்டு ஏற்பட்ட புரட்சியைத் தான் சமயச்சீர்திருத்த இயக்கம் என்று கூறுவர். கத்தோலிக்கசமயத்தில் காணப்பட்ட சீர்திருத்தங்களையும் ஊழல் களையும் அகற்றி அதைப் பினிதமாக்க மார்டின் லூதர் ஜெர்மனியில் இதனை ஆரம்பித்தார்.

சமயச்சீர்திருத்தம் என்பதன் பொரும கிருஸ்தவ திருச்சபையினைத் திருத்துவது அல்லது அதன் குறைகளைக் களைபது,

இது இரண்டுகட்டங்களில் நடைபெற்றது.

முதல் கட்டம்:- போப்பாண்டவருக்குத் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை எதிர்த்து ஏற்பட்டது.

2-வது கட்டம்:- திருச்சபையில் ஏற்ப்ட்ட ஊழல்களை ஒழிக்களை ஒழிக்க ஏற்பட்டது.

காரணங்கள்:- 1. திருச்சபையில் ஊழலதிருச்சபை புனிதமான இடம், அதில் பணிபுரியும் மதகுளுக்கள் நல்லவற்றை பேசவும், செய்யவும் வேண்டும். முறைப்படி பணிபுரிய வேண்டும். அவ்வாறு இருப்பதன் மூலம் உலக மக்களில் உணர்வினைத் தூண்டி நல்வாழ்க்கை அமைக்க முடியும். ஆனால் காலப் போக்கில் வேலியே பயிரை மேய்ந்தது.

போக்கில் வேலியே பயிரை மேய்ந்தது. திருச்சபை ஊழலின் பிறப்பிடமானது ; அதில் வாழ்ந்த மதகுருமார்கள் உலக வாழ்க்கையில் ஈடுபட்டனர் : பாவிகளாபனா; அறதெறி யீலிருந்து மாறுபட்டனர்; அதனால் அவர்கள் மக்களின் வெறுப்புக்குள்ளாயினர். - 2. போப்பின் அதிகார வெறி: போப் மிகவும் செல்வாக்கு மிக்கவரானார். அதிகாரம் அவரிடம் குவிந்தது. மன்னரா யிருந்தாலும் அவரை நாடுகடத்தும் அதிகாரத்தை போப் பெற்றார். அதனால் அவர் ஆணவம் அதிகரித்தது, அவர் அதிகாரத்தைப் பயன்படுத்தித்; தன் புதிய ஆணையால் யாரையும் தண்டிக்க முற்பட்டார். அதனைக் கண்ட பல கிறித்துவர்கள் மனம் வெதும்பினர்,

3. மதச்சார்பற்ற செயல்களில் தலையீடு! திருச்சபை, மதச்சார்புடையது ; மதந்தைப்பற்றிய காரியங்களில் தலையிட (வேண்டியது . ஆனால் செல்வாக்கும் அதிகாரமும் அதிகரிக்க அதிகரிக்க நாட்டு நடவடிக்கைகளிலும் அரசியலிலும் தலையிட ஆரம்பித்தது. மன்னரைத் தேச நதெடுக்கும் செயல்களிலும் தலையிட்டது. அதனால் அதன் புனிதத்துவம் கெட்டது ; மக்களில் ஒரு பிரிவினர் திருச்சபையைக் குறைகூற ஆரம்பித் தனர். திருச்சபையும் தன் பணிகளை முறையாகச் செய்ய முடியவில்லை .

4. திருச்சபையின் வரி விதிப்பு :

ஆரம்ப காலத்தில் திருச் சபைகளின் வரி விதிப்பை மக்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண் டனர்; அதனை அவர்கள் சமயச் சார்புடையதாக எண்ணினர். ஆனால் காலம் செல்லச் செல்ல திருச்சபையின் வரி வதிப்பு அதிகமாயிற்று. மக்களால், குறிப்பாக பாமரமக்களால், அவ் வரி விதிப்பைத் தாங்கமுடியவில்லை. திருச்சபையின் மீதுள்ள பற்றைத் தவறாகப் பயன்படுத்தி மக்கள் மீது வரிச்சுமை அத்கரிக்கப்படுவதாக உணர்ந்தனர். இவ் வரிப்பளுவை மன்வரும் விரும்பவில்லை. ஏனெனில் மக்கள், திருச்சபைக்கும் வரி கொடுத்துவிட்டு. அரசுக்கு வரி கொடுக்க இயலாமல் உள்ளனர் என்று அறிந்தார். மேலும், திருச்சபை அவ்வாறு பெறப்படும் வரியைத் தவறாகப் பயன்படுத்தியதுடன், மன்னர் களுக்கு எதிராகப் பயன்படுத்துவதாகவும் அறிந்தனர். ஆகவே இவ் வரிப்பளுவைக் குறைக்கத் திருச்சபை சீர் திருத்தப்பட வேண்டியது அவசியமாகக் கருதப்பட்டது.

5. தேசிய திருச்சபைகளின் எழுச்சி :

மத்திய காலத்தில் ரோமானிய போப் ஐரோப்பிய கிறித்துவர்களின் உயர் தலைவர் ராக விளங்கினார். அனைத்து ஐரோப்பியக் கிறித்துவர்களும் அவரது ஆணைக்குக் கட்டுப்பட்டனர்; அவருக்குக் கீழ்ப்படிந்தனர். இதற்கு முக்கியக் காரணம், மன்னர்கள் பிரபுக் களை அடக்கப் போர் புரித்துகொண்டிருந்தனர். காலப் போக்கில் மன்னர்கள் செல்வாக்கு மிக்கவராயினர். தேசியத் திருச்சபைகள் தோன்றின. இவைகள் அரசர்களின் சொல்லுக்கு கட்டுப்பட்டு இருந்தன. ரோமானிய போப்பின் சொல்வாக்கு செல்வாக்கு அற்றுப்போனது.

6. மறுமலர்ச்சிகளின் விளைவுகள் :

ஐரோப்பாவில் மறு மலர்ச்சி ஏற்பட்டது. பழைய கிரேக்க தத்துவங்கள் மீண்டும் மக்களிடம் போதிக்கப்பட்டன. போப் கூறும் ஒவ்வொரு கருத்தும் ஆணையும் நன்கு ஆராயப்பட்டது. அவை கருத் தாழம் அற்றும்; நம்பமுடியாதனவாகவும் காணப்பட்டன. மக்கள் சிந்திக்க முற்பட்டனர். திருச்சபை சீர்திருத்தப்பட வேண்டியது அவசியம் என்பதை அறிந்தனர். விஞ்ஞானம் வளர்ந்தது . பேக்கன், கோப்பர் நிகஸ், கலிலியோ, புரூனோ போன்றோரின் கருத்துக்கள் நடைமுறைப் படுத்தப்பட்டன, மொழி வளர்ச்சியும் முதலிடம் பெற்றது. லத்தீன் மொழி வளர்ச்சி தளர்ச்சியுற்றது. இத்தாலி,

ஆங்கிலம் பிரஞ்சு, ஸ்பானிய மொழிகள் வளர்ச்சியுற்றன. அதனால் மக்களில் பலர் கல்வியறிவு பெற்றனர்.

7. சிலுவைப் போர்கள் :

சிலுவைப் போர்கள் ஏற்பட்ட பொழுது, பிற மதத்தவர்களுக்கு இருக்கும் உரிமைகளைக் கிறித் தவர்கள் அறிந்தனர். தங்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய உரிமைகளை போப் எவ்வகையில் தடுத்தார் என்பதை அறிந் தனர். தங்கள் மதமே உயர்ந்தது ; உயர் கருத்துக்களைக் கொண்டது என்ற மனப்பான்மை தவறானது என்பதை அறிந் தனர். அவற்றைத் தங்கள் மதத்திலும் சேர்த்துப் புதிய சீர்திருத்தத்தை ஏற்படுத்த விரும்பினர்.

8. பொருளாதார மந்தமும், திருச்சபையின் தவறும் :

15-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் பெரும் பொருளாதார மந்தம் ஏற்பட்டது. மக்கள் வறுமையில் வாடினர். வாடிய மக்களை வாரியணைத்து நல்வாழ்வு கொடுக்கத் திருச்சபை மறுத்து விட்டது. மக்கள் அல்லல்பட்டு உண்ண உணவின்றி வாழும் பொழுது திருச்சபையில் இருந்தோர் ஆனந்த வாழ்வு வாழ்வது கண்டு மக்கள் மனம் நொந்தனர். திருச்சபையின் உண்மை சொரூபம் தெரிந்தது. அவர்களின் வேஷம் கலைந்தது. மக்களுக்கு போப்மீது இருந்த நம்பிக்கை மறைந்தது. மருத்துவ வசதி செய்யவும் கல்வி போதிக்கவும் தேவையானவர்களுக்குப் பொருளுதவி செய்யவும் திருச்சபை தவறியது.

9, சீர்திருத்த வாதிகள் தோன்றல்:-

16-ஆம் நூற்றாண்டில் பல சமய சீர்திருத்த வாதிகள் தோன்றிய ஜான் விக்னிப், ஜான்ஹன், கவோனரோலா, ஈராஸ்மஸ், கோலே, சர் தாமஸ் மூர் போன்றோரின் எதிர்ப்பால் திருச்சபை ஆட்டம் கண்டது.

உடமைக் காரணம்-பாவமன்னிப்புசீட்டு விற்பனை:-

திருச்சபையில் பல விநோதமான மதக் கொள்கைகள் தோன்றின. அவைகளில் ஒன்று பாவமன்னிப்புசீட்டு என்பதொன்றாகும். செயின்ட் பீட்டர் கோபாலைப் புதுப்பித்துக்கட்ட நிறைய பணம் தேவைப்பட்டது. அதற்காக போப்பாண்டவர் லியோ கொண்டுவந்ததுதான் பாவமன்னிப்புச் சீட்டு என்பதாகும். இதன்படி கத்தோலிக்கர்கள் ஏதேனும் பாவம் செய்தால் பணம் கட்டி பாவமன்னிப்புச்சீட்டு ஒன்றை மத குருமார்களிடமிருந்து வாங்க வேண்டடும். இதன் முலம் அவர்கள் செய்த

பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்படும.  அவர்கள் எவ்வித சிரமுமின்றி மோட்டத்தை அடையலாம் என்று கூறப்பட்து.

ஜெர்மணியர் இப்பணியைச் செய்ய டெட்ஸல் என்ற ஒரு துறவி அனுப்பிவைக்கப்பட்டார்.  அவர் அங்கு சென்று சீட்டுக்களை விற்கத் தொடங்கினார். இதை எல்லா மக்களும் குறிப்பாக மார்டின் லூதர் என்பவர் கடுமையாக எதிர்த்தார். இதுவே சுய கீர்திருத்தத்தின் தொடககமாகும்:-

ஜெர்மனியில் சுயச்சீர்திருத்தம் பரவல்:-

1483-ல் ஐசல்பென் என்ற ஜெர்மாணிய பகுதியில் பிறந்தார். பல்கலைக்கழகத்தில் பயின்றார் சிறந்த பேச்சாளர் எழுத்தாளர் நல்ல மாணவர் இறை பக்தி மிக்கவர் ஈப்ரு கிரேக் மொழீகளிலிருந்த மூல பைபிளை பயின்றார் கரு0எ இல் துறவி பத்தாம் பெற்றார் கரு0அ இல் லிடென் பர்க் பல்கலைகழகத்தில் ஆசிரியர் ஆனார் ரோமாபுரிக்கு ஒரு குறுகிய கால பயணத்தை மேற்கொண்டார் அங்கு திருச்சபையினர் நடத்திய உல்லாச வாழ்கையைக்கண்டு அதிர்ச்சி அடைந்தார் இச்சமயத்தில் ஜெர்மனில் பாவமன்னிப்பு சீட்டுகளை விற்கும் பணியினை செடல் என்ற துறவி மேற்கொண்டார் கத்தோலிக்க திருச்சபையில் கோட்பாடு பாவமன்னிப்பு என்பது பாவம் செய்தவர்கள் தங்களது செய்கைக்காக வருத்தத்தோடு பாதிரியரிடம் மன்னிப்பு கோரினால் அவரது பாவத்திலும் மரணற்றிற்கு தண்டனை அளவு குறையும் அனால் திருச்சபையின் கஜானாவை நிரப்ப பாவமன்னிப்பு சீட்டு விற்பனையை லூதர் கடுமையாக எதிர்த்தார் போப் ஆண்டவரின் சில உரிமைகளை எட்டுறது லூதர்தொண்ணூதைந்து குறிப்புகள் கொண்ட அறிக்கையை லிட்டேன் பர்க் திருச்சபையின் கதவில் பதித்தார் இதனால் கோபம் கொண்ட போப் பத்தாம் லியோ யூதரி திருச்சபையிலிருந்து வெளியேதறுவதற்காக கருஉ0 இல் அச்சுறுத்தும் ஆணை ஒன்றை வெளியிட்டார் இந்த ஆணையை லூதர்பொது கூட்டதில் வெளியிட்டார் .

## ஒம்ஸ் சபை:

திருச்சபை எதிரான கொள்கைகள் பரப்பியதால் யூதரை தண்டிக்க வேண்டுமென போப் அரசரை கேட்டுக்கொண்டார் அரசர் ஜெர்மானிய சிர்ராகளையும் அழைத்து ஓமான் நகரில் யூதரை விசாரிக்க அவர் தம் கொள்கையில் பிடிவாதமாக இருக்க யாராலும் ஏதும் செய்ய இயலவில்லை ஜெர்மானிய சிற்றரசர்கள் முழு ஆதரவு தந்தனர் யூதருக்கு சாக்சனி சிற்றரசர்கள் பிரிட்டன் உள்ள மாளிகையில் ஓர் ஆண்டு மரித்துவைத்தனர் அபோதுதான் கருநரு இல் விவிலிய நூல்கள் ஜெர்மனிய மொழிபெயர்ப்பை லூதர்வெளியிட்டார் சமயத்தின் பெயரால் நடக்கும் தவறுகளை எதிர்த்து லூதர்செய்த செயல்பாடுகள் யுதாரியா கோட்பாடு என்று

அழைத்திடப்படுகிறது இதை பின்பற்றிய ஜெர்மனிய நாடுகள் சாக்சனி ஹெலி பெர்சியா பிரகாண்டங்களை போன்றவை

**லூதரினசம் வெற்றிபெற காரணங்கள்** :

பேரரசர் 5 ஆம் கால்ஸ் ஸ்பானிய நாட்டவராகவும் போப் இத்தாலியராகவும் இருந்தனர் தங்கள் வரி பணம் இத்தாலி செல்வதை மக்கள் விரும்பவில்லை ஜெர்மனியின் அரசியல் நிலையும் யூதரின் இயக்க வளர்ச்சிக்கு உதவியது ந. ஜெர்மனிய சித்தாந்தங்களுக்கு இயக்கத்திற்கும் ஆதரவு அளித்தனர் யூதரின் எளிமையான வாழ்க்கையும் சமயப்பற்றும் உண்மையும் வெற்றிக்கு காரணமாயிற்று .

**சமயசீர்திருத்த இயக்கத்தின் விளைவுகள்**

1. போப்பாண்டவரின் செல்வாக்கு குறைந்து. பலநாடுகள் அவரின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை அடைந்தன.
2. கத்தோலிக்க மதம் பிளவுபட்டு லூதரணிசம், கால்வனிசம் ஆங் கிலக்கினிசம் போன்ற பல திருச்சபைகள் ஐரோப்பாவில் தோன்றின.
3. ஜெர்மாணிய சிற்றரசர்களின் வலிமை கூடியது. ரோம்மானிய பேரரசரின் வலிமை குன்றியது. இதனால் ஜெர்மானிய ஐக்கியம் பல நூற்றாண்டுகள் தள்ளிப் போனது.
4. கத்தோலிக்கர்களும் புராட்டஸ்டண்டுகளும் போட்டிபோட்டு கொண்டு ஒழுக்கத்தை நிலைநாட்டவும் மக்களுக்கு கல்வியறிவை புகட்டவும் பயிற்சிக் கூடங்கள் நிறுவவும் முயற்சித்தனர்.
5. இருபிரிவினரும் சமயப் போர்களில் ஈடுப்பட்டதால் பல படுகொலைகள் நடை பெற்றன இதன்
6. போப்பின் ஆதிக்கத்திலிருந்து விலகிய நாடுகள் சுயாட்சி பெற்றன. இதனால் தேசிய வளர்ச்சி அடைந்தது. தனிமனித கருத்துக்களுக்கு முக்கியததுவம் அளிக்கப்பட்டதால் ஜனநாயகக் கோட்பாடு தோன்றி வளர்ந்தது.
7. நில மானிய மறை அழிந்து முதலாளித் துவம் தோன்றியது.

8. சமய்சீர்திருத்தம் மத சகிப்புத் தன்மை என்ற புதிய எண்ணத்தைத் தோற்றுவித்தது.
9. புராட்டஸ்டண்டு நாடுகள் திருச்சபையின் சொத்துக்களை எனப்படும்

**சமயசீர்திருத்த இயக்கத்தின் விளைவுகள்**

1. போப்பாண்டவரின் செல்வாக்கு குறைந்து. பலநாடுகள் அவரின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை அடைந்தன.
2. கத்தோலிக்க மதம் பிளவுபட்டு லூதரணிசம், கால்வனிசம் ஆங் கிலக்கினிசம் போன்ற பல திருச்சபைகள் ஐரோப்பாவில் தோன்றின.
3. ஜெர்மாணிய சிற்றரசர்களின் வலிமை கூடியது. ரோம்மானிய பேரரசரின் வலிமை குன்றியது. இதனால் ஜெர்மானிய ஐக்கியம் பல நூற்றாண்டுகள் தள்ளிப் போனது.
4. கத்தோலிக்கர்களும் புராட்டஸ்டண்டுகளும் போட்டிபோட்டு கொண்டு ஒழுக்கத்தை நிலைநாட்டவும் மக்களுக்கு கல்வியறிவை புகட்டவும் பயிற்சிக் கூடங்கள் நிறுவவும் முயற்சித்தனர்.
5. இருபிரிவினரும் சமயப் போர்களில் ஈடுப்பட்டதால் பல படுகொலைகள் நடை பெற்றன இதன்
6. போப்பின் ஆதிக்கத்திலிருந்து விலகிய நாடுகள் சுயாட்சி பெற்றன. இதனால் தேசிய வளர்ச்சி அடைந்தது. தனிமனித கருத்துக்களுக்கு முக்கியததுவம் அளிக்கப்பட்டதால் ஜனநாயகக் கோட்பாடு தோன்றி வளர்ந்தது.
7. நில மானிய மறை அழிந்து முதலாளித் துவம் தோன்றியது.
8. சமய்சீர்திருத்தம் மத சகிப்புத் தன்மை என்ற புதிய எண்ணத்தைத் தோற்றுவித்தது.
9. 9.புராட்டஸ்டண்டு நாடுகள் திருச்சபையின் சொத்துக்களை பறிமுதல் செய்தால் அரசின் செல்வாக்கு உயர்ந்தது பொருளாதார மேம்பாடு ஏற்பட்டது.

10. .சமயத்தின் அடிப்படையில் ஐரோப்பா இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. கத்தோலிக்க சமய நாடுகள், புராட்டஸ்டண்டு நாடுகள் என்று அவை அழைக்கப்பட்டன.

11.திருச்சபையின் ஊழல்கள் மறைந்ததால் மீண்டும் திருச்சபை மறுப்பியக்கத்தைத் தொடங்கியது.

**சமயச் சீர்திருத்த** மறுப்பு **இயக்கம்:-**
**காரணங்கள் :-**

1. புராட்டசஸ்டண்டுகளுள் லூதரன், ச்விங்கிலியர், கால்வீணியர் என பல பிரிவாளர் தோன்றினர், இவர்களுள் ஒற்றுமை இல்லை,
2. போப் மூன்றான் பால், நான்காம் பால், நன்காம் பால் போன்ற திறமைமிக்க போப்பாண்டவர்கள் கத்தோலிக்க சமயத்தின் பழைமை பொலிவை பாங்குடன் நிலை நாட்டி சீர்திருத்த வாதிகளாக் செயல்பட்டனர்.
3. மாகுளுக்களின் செயல்களில் போற்றுதற்குரிய மாற்றங்கள் தோன்றின.
4. கத்தோலிக்க சமயத்தைக் காக்க பல சங்கங்கள்.

**எதிர் சமய சீர்திருத்தர் இயக்கத்தை நாடறிய இயக்கங்கள்-**இயேசு சபை அல்லது இயேசு சங்கம் 1553 யில் ரோம் நகரில் இக்னிட்டிஸ் லயோலா எச்சங்கத்தை ஏற்படுத்தினார். .இச்சபையில் தலைவர் என்றும் உறுப்பினர்கள் ஜெசுவிட்ஸ்கள் என்றும் அழைக்கப்பட்டனர்  பணிகள்.

**.1 கல்விப்பணிகள்** . வறுமை துறவு பணிவு என்ற விரதங்களுடன் நம்பிக்கையுடன் நடத்தல் என்ற விரதமும் கற்றுக்கொடுக்கவும் பயிற்சியளிக்கவும் தனிக்கல்வி நிறுவனங்கள் அமைக்கப்பட்டன இதில் பயன்பெற்றவர்கள் பலரும் உலகெங்கும் பல கல்வி கட்டமைப்புகளையும் பல்கலை கழகங்களையும் நிறுவினார் கல்விபணிமூலம் உலக மக்களின் கவனத்ததை ஈர்த்து மத பிரச்சாரமும் செய்தார்கள் .

2. **ஆன்மிக வளர்ச்சியில் பங்கு** மக்களிடையே உரையாற்றி மக்களை நல்வழிப்படுத்தும் முயற்சில் ஈடுபட்டார்கள் தங்கள் அறிவு குர் ர்மையாலும் தூய

வாழ்க்கையினாலும் மக்களை நல்வழிப்படுத்தினர் அதைபோல் ஆன்மிக வளர்ச்சியில் பெரும் பங்கயாற்றினர்

3. சமய பிரச்சாரம் உலகமுழுவதும் இயேசு சங்கத்தினர் கத்தோலிக்க சமய பிரச்சாரம செய்தனர்.

3.சமய பிரச்சாரம்:-
குறிப்பாக ப்ரோட்டஸ்டன் நாடுகளின் சமயத்தை பரப்ப பிரான்ஸ் ஜெர்மனி போலந்து இங்கிலாந்து ஸ்விஸ்ட்டெர்லண்ட் வளர்ச்சி அடைய செய்தனர். .பொதுமக்கள் இயேசு சபை மீது ஜேசுபீட்ஸ்களின் மீதுஇம் நம்பிக்கை வைத்தனர். லயோலா தான் ஏழு சீடர்களுள் ஒருவரான பிரான்சிஸ் சேவியர் சீனா இந்தியா ஜப்பான் போன்ற தூர கிழக்கு நாடுகளுக்கு சென்று கத்தோலிக்க வளர்ச்சிக்கு பாடுபட்டனர். .ட்ரெண்ட் மகா சபை திருச்சபையில் ஏற்படும் பிரச்சனைகளை சீர்படுத்த கார்டினல்கள் அர்ச் பிசோப்கள் மற்றும் சமய பெரியோர்களை கொண்ட ஒரு மகாசபை இருந்தது இச்சபை ட்ரெண்ட் மகாசபை எனப்பட்டது. 1563 இல் 4 ஆம் பாயர் இச்சபையை சில கோட்பாடுகள் அறிவிதித்தார்

**2.டிரண்டு மகா சபை:-**

1. திரு சபையின் சீர்கேடுகளையும் சமய குருமார்களையும் ஊழலை நீக்கி புனித வாழ்க்கையை தொடங்குதல்.
2.பாவ மன்னிப்பு சீட்டு விற்பது தடைசெய்யப்பத்த
3.பிசோப்களும் பாதிரியார்களும் தங்கள் சமய பணிகளை வேறுருவரிடம் ஒப்படைத்துவிட்டு பிறஇடங்களுக்கு பொது வாழ்க்கையில் ஈடுபடுவது கண்டிக்கப்பட்டது

4. ப்ரொடெஸ்டெர் கோட்பாடுகள் நிராகரிக்கப்பட்டது

3. இண்டெக்ஸ்: தடைசெய்யப்பட்ட நூல்களின் பட்டியல் இண்டெக்ஸ் என்ற தலைப்பில் தயாரிக்கப்பட்டது. ட்ரெண்ட் கொன்செல்லிங் முடிவு போக ஒரு குழுவை அமைத்து கத்தோலிக்க சமயத்துக்கு எதிராக வெளியிடப்பட்ட நூல்களின் பட்டியல் ஒன்றை தயாரித்து வெளி இட்டார் .1564 யில் இதன் முதல் பட்டியல்

வெளியிடப்பட்டது. இதன் முதல் பிரிவில் சமய துரோகிகளின் பட்டியலும் இரண்டாவது பிரிவில் தடைசெய்யப்பட்ட நூல்களின் 3ஆவது பிரிவில் தடைசெய்யப்பட்ட நூல்களில் காணப்படும் சில ஆசப்பத்திற்குரிய பகுதிகளும் குறிப்பிடப்பட்டன.

இத்தாலியில் இது தீவிரமாக நடைமுறை படுத்தப்பட்டபோதிலும் ஐரோப்பில் இருந்து இதை பல நாடுகள் நடைமுறைபடுத்த மறுத்துவிட்டன.